**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கூடலூர்**

**முன்னிலை – திரு. G. சரவணகுமார்., B.A., B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்**

**2026–ம் ஆண்டு, ஜூன் மாதம் 18.ம் நாள் வியாழக்கிழமை**

**CC.No. 43/2018**
**CNR.No.TNNS070005692018**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | மாநில அரசு<br>காவல் உதவி ஆய்வாளர் மூலமாக<br>தேவர்சோலை காவல் நிலையம்,<br>நீலகிரி மாவட்டம்.<br>குற்ற எண். 18/2018. |
| குற்றம் சாட்டப்பட்டவர் | – | திரு. பைசல், வயது 31/2026,<br>த/பெ. முகமது அலி,<br>க.எண்.18/87, தேவர்சோலை,<br>கூடலூர். |
| வனையப்பட்ட குற்றங்கள் | – | U/s.294(b), 324 and 506(ii) of IPC |
| குற்றம் நிகழ்ந்த நாள் | – | 11.03.2018 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 13.03.2018 |
| எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | – | இல்லை |
| எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | இல்லை |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 08.05.2019 |

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.18 18:58:34 +0530

| | | |
|---|---|---|
| குவிமுச.பிரிவு.240–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 18.11.2020 |
| சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாட்கள் | – | <table><tr><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td></tr><tr><td>அ.சா.1</td><td>05.01.2023</td><td>--</td></tr><tr><td>அ.சா.2</td><td>05.01.2023</td><td>--</td></tr><tr><td>அ.சா.3</td><td>23.02.2023</td><td>23.02.2023</td></tr><tr><td>அ.சா.4</td><td>23.02.2023</td><td>23.02.2023</td></tr><tr><td>அ.சா.5</td><td>01.02.2024</td><td>01.02.2024</td></tr><tr><td>அ.சா.6</td><td>17.12.2024</td><td>17.12.2024</td></tr><tr><td>அ.சா.7</td><td>29.04.2026</td><td>29.04.2026</td></tr></table> |
| குவிமுச.பிரிவு.311–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | – | (i) கு.வி.மு.ச பிரிவு 70(2)ன் கீழ் Crl.M.P.No. 1611/2019 என மனுதாக்கல் செய்யப்பட்டு 27.04.2019 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>(ii) கு.வி.மு.ச பிரிவு 70(2)ன் கீழ் Crl.M.P.No. 2526/2022 என மனுதாக்கல் செய்யப்பட்டு 20.07.2022 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>(iii) கு.வி.மு.ச பிரிவு 70(2)ன் கீழ் Crl.M.P.No. 1792/2023 என மனுதாக்கல் செய்யப்பட்டு 27.04.2023 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>(iv) கு.வி.மு.ச பிரிவு 70(2)ன் கீழ் Crl.M.P.No. 2234/2024 என மனுதாக்கல் செய்யப்பட்டு |

| | | |
|---|---|---|
| | | 27.05.2024 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>(v) கு.வி.மு.ச பிரிவு 311.ன் கீழ் Crl.M.P.No. 4357/2025 என மனுதாக்கல் செய்யப்பட்டு 02.12.2025 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |
| குவிமுச.பிரிவு.313(1)(b)– இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 06.05.2026 |
| தலைமறைவு எதிரி குறித்த விவரம் | – | 08.04.2019 – 27.04.2019<br>04.02.2021 – 20.07.2022<br>30.03.2023 – 27.04.2023<br>25.04.2024 – 27.05.2024 |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | – | இல்லை |
| தீர்மானம் | – | எதிரி இ.த.ச பிரிவு 324ன் கீழ் குற்றவாளி |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் குற்றம் புலன் கொள்ளப்பட்டு, 09.08.2018 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையீட்டாளர் தரப்பில் தேவர்சோலை காவல் ஆய்வாளர் அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருமதி. A. ராபியா பீவி, அவர்களும் முன்னிலையாகி இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து இறுதியாக கடந்த 06.05.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்ததில் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

1) குற்றமுறையீட்டாளர் தரப்பில், கடந்த 11.03.2018ம் தேதி சுமார் 21.30 மணியளவில் தேவர்சோலை தேவர் IIகிரவுண்ட்பாடியில் வைத்து எதிரி நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து தாயோளி மகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டியும், மேலும் எதிரி ஒரு இரும்பு கம்பியால் நிகழ்நிலை புகார்தாரரை அடித்து சிறுகாயம் ஏற்படுத்தியும், நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து "உன்னை கொல்லாமல் விடமாட்டேன்" என்று கொலை மிரட்டல் விடுத்ததுள்ளதுமான எதிரியின் செய்கையானது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 மற்றும் 506(ii).ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் எனவும் கு.வி.மு.ச பிரிவு 173(2)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2) குற்றம் புலன் கொள்ளல்:–**</u>

இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324 மற்றும் 506(ii).ன் கீழ் குற்றங்கள் இந்நீதிமன்றத்தால் கு.வி.மு.ச. பிரிவு 190(1)(b)ன் கீழ் புலன் கொள்ளப்பட்டு வழக்கு கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தொடர்ச்சியாக எதிரிக்கு நீதிமன்றத்தில் முன்னிலையாக கு.வி.மு.ச. 204(1)(a)–ன் கீழ் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது.

<u>**3). எதிரிகளுக்கு நகல் வழங்கல் மற்றும் முதல் நிலை விசாரணை:–**</u>

அழைப்பாணையின் பேரில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும் எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு.207.ன் கீழ் எவ்வித தாமதமுமின்றி இலவசமாக வழங்கப்பட்டது.

G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.18 18:58:44 +0530

எதிரிக்கு வழக்கு விவரங்கள் தெரிந்து கொள்ள வழக்காவண நகல்கள் வழங்கப்பட்டு போதிய அவகாசம் கொடுத்த பின்னர் கு.வி.மு.ச. பிரிவு.281–ன் கீழ் வழக்கு சாராம்சங்கள் குறித்தும் விளக்கி வினவ கேட்டதில் எதிரி குற்றவாளி இல்லையென மறுத்துரைத்தார்.

4) குற்றச்சாட்டு வனைதல்:–

இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்ததில் எதிரி குற்றம் புரிந்ததற்கான போதிய காரணங்கள் உள்ளதாக தோன்றியதால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324 மற்றும் 506(ii).ன் குற்றங்களுக்கு கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன. எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அவருக்கு கு.வி.மு.ச. பிரிவு 240(2)–ன் கீழ் படித்து காண்பித்து விளக்கி வினவி கேட்கப்பட்டது,

5. எதிரிகளின் வாதம்:–

எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளுக்கு "**குற்றவாளி இல்லை**" என மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டு அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் சார்வு செய்யப்பட்டன.

6. அரசு தரப்பு சாட்சியம்

இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1. முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1. முதல் அ.சா.ஆ.8 வரையிலான

சான்றாவணங்களும் அ.சா.பொ.1 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டன. பின்னிட்டு அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டன.

7) **<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சாரம்சம் பின்வருமாறு:-</u>**

7.1. அ.சா.1. திரு. பிரதீப் குமார் இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட/ காயம்பட்ட நபரும் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரும் ஆவார்.

அ.சா.2. திருமதி. தனலட்சுமி அ.சா.1 ன் மனைவி ஆவார்.

அ.சா.3 திரு. அஷ்ரப் தேவர்சோலையில் வசித்து வந்து கூலி வேலை செய்து வந்துள்ளார்.

அ.சா.4 திரு. வாசுதேவன் தேவர்சோலையில் வசித்து வந்து பேக்டரி வேலை செய்து வந்துள்ளார்.

அ.சா.5 திருமதி. பிரியங்கா அ.சா.1 மற்றும் அ.சா.2ன் மகள் ஆவார்.

அ.சா.6 திரு. சண்முகராஜ், கூடலூர் காவல் நிலையத்தில் தற்போதைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஆவார்.

அ.சா.7 திரு. மணிதுரை கோவை மாவட்டம், கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் தற்போதைய உதவி ஆய்வாளரும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியும் ஆவார்.

7.2. எதிரி பைசல் அ.சா.1னிடம் சம்பவத்திற்கு முன்பு ரூ.5,000/- கைக்கடனாக வாங்கி அந்த தொகையை 1 வாரத்தில் தருவதாக சொல்லியுள்ளார். ஆனால் 2 மாதம் ஆகியும் வாங்கிய கடனை எதிரி பைசல் அ.சா.1னிடம் கொடுக்காமல் இருந்துள்ளார். கடந்த 11.03.2018 அன்று இரவு

09.00 மணியளவில் அ.சா.1 உட்பிரையர் எஸ்டேட்டில் வாட்ச்மேன் வேலை முடித்துவிட்டு அவரது வீட்டுக்கு கிரவுண்ட்பாடி செல்வதற்கு வந்துகொண்டிருந்தபோது, கிரவுண்ட்பாடியில் எதிரி பைசலும் அவருடன் சில கேரளா நபர்களும் சேர்ந்து அ.சா.1ஐ வழிமறித்து அவரிடம் காசை இப்படி கேட்கிறாயா என்று சொல்ல முடியாத தகாதா வார்த்தையால் திட்டியுள்ளார். அ.சா.1 ஐயப்பன் கோவிலுக்கு மாலை போட்டிருந்ததால் அந்த வார்த்தையை சொல்லவில்லை. அ.சா.1க்கு எழுத படிக்கவும் தெரியாது. எதிரி அ.சா.1ஐ அ.சா.பொ.1 – இரும்பு கம்பியால் அவரது கழுத்து பின்புறம் தோள்பட்டையில் அடித்துள்ளார். பின்னர் அ.சா.1 ஐ பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி மிரட்டியுள்ளார். அ.சா.1ஐ அவரது மனைவியான அ.சா.2 தனலட்சுமி ஆட்டோ மூலம் மேல்கூடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்துள்ளார். அ.சா.1 சிகிச்சையிலிருந்தபோது தேவர்சோலை போலீசார் அ.சா.1 ஐ விசாரித்து அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

7.3. அ.சா.6 திரு. சண்முகராஜ், தேவர்வோலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றியபோது அ.சா.1 பிரதீப் குமார் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து உதவி ஆய்வாளரிடம் தெரிவித்து அவர் சொன்னதன்பேரில் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப தேவர்சோலை காவல் நிலைய குற்ற எண்.18/2018 என இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழ் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

7.4. தொடர்ச்சியாக உதவி ஆய்வாளர் அ.சா.7 திரு.மணிதுரை அவர்கள் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14.03.2018 அன்று சம்பவ இடம் சென்று சாட்சிகள் கார்த்திக் மற்றும் சதீஷ் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேலும் சம்பவ இடத்திலிருந்த 1 1/2 அடி நீளமுள்ள அ.சா.பொ.1 இரும்பு கம்பியை அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார். தொடர்ச்சியாக அ.சா.7 விசாரணை அதிகாரி சாட்சிகள் அ.சா.1 பிரதீப் குமார், அ.சா.2 தனலட்சுமி, அ.சா.3 அஷ்ரப், அ.சா.4 வாசுதேவன் மற்றும் அ.சா.5 பிரியங்கா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். வழக்கு சொத்தை இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அ.சா.ஆ.6 – படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR No. 28/2018 எண் பெற்றுள்ளார்.

7.5. மேலும், எதிரி தலைமறைவாகிவிட்டதால் கைது செய்ய இயலவில்லை. எதிரி 27.03.2018 அன்று உதகை மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளார். காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஹரிஹரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.7 – விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.8 – காய கருத்துரை சான்று பெற்றுள்ளார். தொடர்ச்சியாக விசாரணை அதிகாரி அ.சா.7 உதவி ஆய்வாளர் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.18 18:58:57 +0530

அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதாக அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

**8) எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு.313(1)(b)ன் கீழ் வினவல்:–**

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1. முதல் அ.சா.7 சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதி குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313 (1)(b)–ன் கீழ் விளக்கி வினவிய போது அதனை எதிரி மறுத்துரைத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என எடுத்துரைக்கப்பட்டு எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**9) தீர்வுக்குரிய பிரச்சினை:–**

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகளாவன:**

**i) எதிரி மீதான இதச பிரிவு 294(b).ன் கீழான குற்றச்சாட்டும்,**

**ii) எதிரி மீதான இதச பிரிவு 324.ன் கீழான குற்றச்சாட்டும்,**

**iii) எதிரி மீதான இதச பிரிவு 506(ii)ன் கீழான குற்றச்சாட்டும்**

**அரசு தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

10. இவ்வழக்கில், எதிரி மீது, கடந்த 11.03.2018ம் தேதி தேவர் IIகிரவுண்ட்பாடியில் வைத்து எதிரி அ.சா.1ஐ கெட்ட வார்த்தையால் திட்டியும், அ.சா.பொ.1 – இரும்பு கம்பியால் அடித்து சிறுகாயம் ஏற்படுத்தியும், அ.சா.1க்கு கொலை மிரட்டல் விடுத்தும் இதச பிரிவுகள் 294(b), 324 மற்றும் 506(ii).ன் கீழான குற்றசெய்கைகளில் ஈடுபட்டுள்ளார் என்பதே



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.18 18:59:01 +0530

எதிரி மீதான குற்றச்சாட்டுகள் ஆகும். எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்ய அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள், அ.சா.பொ.1 சான்றுபொருள் குறியீடு செய்யப்பட்டன.

**11. அரசு தரப்பு வழக்கறிஞர் வாதம்:–**

அரசு தரப்பு கற்றறிந்த உதவி அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் அ.சா.1 பாதிக்கப்பட்ட நபர் சாட்சியம் மூலமும், அ.சா.2, அ.சா.3, அ.சா.5 கண்ணுற்ற சாட்சிகள் மூலமும், அ.சா.4 கேள்விபட்ட சாட்சியம் மூலமும், அ.சா.6 மற்றும் அ.சா.7 புலன் விசாரணை சம்மந்தப்பட்ட சாட்சியம் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கு சட்டப்படியான அதிகபட்ச தண்டனை வழங்கிட வேண்டியும் வாதிட்டார்.

**12. எதிரி தரப்பு வாதம் :–**

எதிரி தரப்பில், அ.சா.1ற்கும் எதிரிக்கும் இடையே இருந்த பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனையில் முன்விரோதத்தில் பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.4 கண்ணுற்ற சாட்சிகள் அ.சா.1னின் நெருங்கிய உறவினர் என்றும், கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட சாட்சிகளும் குற்ற

G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.18 18:59:03 +0530

சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சாட்சியமளிக்கவில்லை என்றும், பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சம்மந்தமாக தனிப்பட்ட பொது சாட்சிகள் யாரும் அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை என்றும், தடய சொத்து கைப்பற்றுகை முரண்பட்டுள்ளது என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு கொடுத்து விடுவிக்க வேண்டியும் வாதிட்டார்.

**<u>13) தீர்வு</u>**

**<u>இ.த.ச. பிரிவு 324.ன் கீழான குற்றச்சாட்டு:-</u>**

13.1. எதிரி மீது கடந்த 11.03.2018ம் தேதி சுமார் 21.30 மணியளவில் தேவர்சோலை தேவர் II கிரவுண்ட்பாடியில் வைத்து எதிரி அ.சா.பொ.1 – இரும்பு கம்பியால் அ.சா.1ஐ அடித்து சிறுகாயம் ஏற்படுத்திய செய்கைகளுக்கு எதிரி மீது இ.த.ச. பிரிவு 324.ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

13.2. இவ்வழக்கில் எதிரி மீதான பிரதான குற்றச்சாட்டு யாதெனில், கடந்த 11.03.2018 அன்று எதிரி அ.சா.1 பிரதீப் குமார் என்பவரை ஒரு இரும்பு கம்பியால் அடித்து சிறுகாயம் ஏற்படுத்தியதன் மூலம் இ.த.ச பிரிவு 324ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்பதாகும்.

13.3. வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், அ.சா.ஆ.1 புகாரிலும், அதன் பேரிலான அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கையிலும், கு.வி.மு.ச. பிரிவு 161(3).ன் கீழான சாட்சி வாக்குமூலத்திலும் கடந்த



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.18 18:59:06 +0530

11.03.2018–ம் தேதி இரவு சுமார் 09.30 மணியளவில் உட்பிரையர் எஸ்டேட்டிலிருந்து வேலை முடித்து தேவன் II கிரவுண்ட்பாடியில் இருக்கும் அ.சா.1ன் வீட்டின் பக்கம் சென்று கொண்டிருந்தபோது அங்கு அ.சா.1க்கு நன்கு தெரிந்த எதிரி பைசல் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது அ.சா.1 அவரிடம் தனக்கு கொடுக்க வேண்டிய பணம் ரூ.5000/– எப்போது தருவாய் என கேட்டதாகவும், அதற்கு எதிரி பைசல் உனக்கென்னடா தாயோளி மகனே பணம் தரனும் அதெல்லாம் தரமுடியாது என்று கூறி ஒரு இரும்பு கம்பியை எடுத்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி என் தலையிலும் தோள்பட்டையிலும் ஓங்கி அடித்ததாகவும் கண்டுள்ளது.

13.4. இவ்வழக்கின் வழக்காணவங்கள், சாட்சிகள் மற்றும் சான்றவாணங்களை ஆராய்கையில், கடந்த 11.03.2018 அன்று அ.சா.1க்கு எதிராக ஒரு குற்ற சம்பவம் நடந்துள்ளது என்பதும், அந்த குற்ற சம்பவத்தில் அ.சா.1க்கு சிறுகாயம் ஏற்பட்டது என்பதும், அதற்காக அவர் கூடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்பதும் அ.சா.1, அ.சா.2, அ.சா.5 ஆகியோர்களின் சாட்சியங்களின் மூலமும், அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலம், அ.சா.ஆ.2 – முதல் தகவல் அறிக்கை, அ.சா.ஆ.7 மற்றும் 8 – விபத்து பதிவேடு மற்றும் காயக்கருத்துரை ஆகியவற்றின் மூலமும் தெரியவருகிறது. இருப்பினும் அ.சா.1க்கு ஏற்பட்ட சாதாரண காயமானது எதிரியின் குற்ற செயலினால் தான் ஏற்பட்டது என்பது அரசு தரப்பில் உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமும் நிரூபித்துள்ளதா என்பதை ஆராய வேண்டியுள்ளது.



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.18 18:59:10 +0530

13.5. வழக்கின் முதல் நடவடிக்கையான அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலும், அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கையிலும் கு.வி.மு.ச. பிரிவு 161(3)–ன் கீழான சாட்சி வாக்குமூலத்திலும் சம்பவத்தின் போது எதிரி அ.சா.1ஐ இரும்பு கம்பியால் தோள்பட்டையில் அடித்து சிறுகாயம் ஏற்படுத்தினார் என்றும் உள்ளது.

13.6. அரசு தரப்பில் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபராக அ.சா.1, கேள்விபட்ட சாட்சியாக அ.சா.2, அ.சா.4, அ.சா.5, கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது சம்மந்தமாக அ.சா.6, மற்றும் புலன் விசாரணையின் பொருட்டு அ.சா.7 ஆகியோர்களும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

13.7. பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 11.03.2018 அன்று இரவு 09.00 மணியளவில் தான் உட்பிரையர் எஸ்டேட்டில் வாட்ச்மேன் வேலை முடித்துவிட்டு தன் வீட்டுக்கு கிரவுண்ட்பாடி செல்வதற்கு வந்துகொண்டிருந்ததாகவும், அப்போது கிரவுண்ட்பாடியில் எதிரி பைசலும் அவருடன் சில கேரளா நபர்களும் சேர்ந்து தன்னை வழிமறித்து காசை இப்படி கேட்கிறாயா என்று சொல்ல முடியாத தகாத வார்த்தையால் திட்டியதாகவும், தான் ஐயப்பன் கோவிலுக்கு மாலை போட்டிருப்பதால் அந்த வார்த்தையை சொல்ல முடியாது என்றும், தனக்கு எழுத படிக்கவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார்.

13.8. மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரி தன்னை ஒரு இரும்பு கம்பியால் தனது கழுத்து பின்புறம் தோள்பட்டையில் அடித்துவிட்டதாகவும்,



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.18 18:59:13 +0530

எதிரி தன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி மிரட்டியதாகவும் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்.

13.9. அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர்களின் சாட்சியங்களை கவனமாக பரிசீலிக்கையில் அவர்கள் மேற்படி குற்ற சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதும், அவர்கள் வீட்டிற்கு மேலே சத்தம் கேட்டதால் அங்கு சென்றுள்ளார்கள் என்பதும், அங்கே அ.சா.1 தோள்பட்டையிலும், தலையிலும் காயம்பட்டு கீழே விழுந்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

13.10. மேலும் அ.சா.2, அ.சா.5 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் அ.சா.1ஐ அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு போய் சேர்த்ததாகவும் சாட்சியமளித்துள்ளனர்.

13.11. எதிரி தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவில்லை. அ.சா.5 ஐ குறுக்கு விசாரணை செய்ய அனுமதித்தபோதிலும், எந்தவித பயனுள்ள தகவலும் பெறப்படவில்லை.

13.12. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3, கேள்விபட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 ஆகியோர் அரசு தரப்பிற்கு முரண்பட்டு சாட்சியமளித்ததால் பிறழ் சாட்சியாக விளம்பப்பட்டுள்ளார்.

13.13. மேலும் வழக்காவணங்களை கவனமாக பரிசீலிக்கையில் அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில் எதிரி பைசல் ஒரு இரும்பு கம்பியை

வைத்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி தலையிலும், தோள்பட்டையிலும் ஓங்கி அடித்தார் என்றும் வாக்குமூலம் அளித்துள்ளார். அவ்வாறே கு.வி.மு.ச பிரிவு 161(3) கீழும் வாக்குமூலமும் அளித்துள்ளார். அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்திலும் எதிரி இரும்பு கம்பியால் தனது கழுத்து பின்புறம் தோள்பட்டையில் அடித்துவிட்டார் என்றும் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்திற்கு அ.சா.1 கூடலூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார் என்பது அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டின் மூலமும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று மருத்துவர் அ.சா.ஆ.8 – காய சான்று அளித்துள்ளதன் மூலம் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பது புலனாகிறது.

13.14. மேலும் இவ்வழக்கில் தடய சொத்து கைப்பற்றுகை குறித்த சாட்சிகள் விசாரிக்கப்பட்டவில்லை. எனினும் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டிருந்த சான்று பொருளை அடையாளம் காட்டி அந்த இரும்பு கம்பியால் தான் எதிரி என்னை அடித்தார் என்று குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்.

13.15. மேலும் ***Balu Sudam Khalde and another -vs -The State of Maharashtra, Criminal Appeal No. 1910 of 2010 dated 29.03.2023*** வழக்கில் **மாண்பமை உச்சநீதிமன்றம்**, *"........26. When the evidence of an injured eye-witness is to be appreciated, the under- noted legal principles enunciated by the Courts are required to be kept in mind:*

*(a) The presence of an injured eye-witness at the time and place of the occurrence cannot be doubted unless there are material contradictions in his deposition.*

*(b) Unless, it is otherwise established by the evidence, it must be believed that an injured witness would not allow the real culprits to escape and falsely implicate the accused.*

*(c) The evidence of injured witness has greater evidentiary value and unless compelling reasons exist, their statements are not to be discarded lightly.*

*(d) The evidence of injured witness cannot be doubted on account of some embellishment in natural conduct or minor contradictions.*

*(e) If there be any exaggeration or immaterial embellishments in the evidence of an injured witness, then such contradiction, exaggeration or embellishment should be discarded from the evidence of injured, but not the whole evidence.*

*(f) The broad substratum of the prosecution version must be taken into consideration and discrepancies which normally creep due to loss of memory with passage of time should be discarded........"*

என காயமுற்ற நபரின் சாட்சியத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றும் அவர்களின் சாட்சியம் எவ்வித அழுத்தமான முரண்பாடுகள் இல்லாமல் நிராகரிக்கப்படக்கூடாது என்றும், வகுத்துள்ள நெறிமுறை இந்த வழக்கிற்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது.

13.16. அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டை கவனமாக பரிசீலிக்கையில் அதில் Assaulted by known person with steel rod என்று குறிப்பிடப்பட்டுள்ளதை காண முடிகிறது. அ.சா.ஆ.8 – காய சான்றிதழில் அ.சா.1க்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அ.சா.1 மற்றும் அ.சா.ஆ.1, 7, 8 ஆகியவற்றை ஒருங்கே ஆராய்ந்ததில் அரசு தரப்பில் எதிரி அ.சா.1ஐ இரும்பு கம்பியால் கழுத்து

பின்புறம் தோள்பட்டையில் அடித்து அவருக்கு சாதாரண காயம் ஏற்படுத்தியதன் மூலம் இ.த.ச பிரிவு 324ன் கீழான குற்றம் புரிந்துள்ளார் என்பது என்ற குற்றச்சாட்டுகள் போதிய சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுடன் எவ்வித சந்தேகத்திற்கும் அப்பாற்பட்ட வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

13.17. மேலும் புலன் விசாரணையைப் பொறுத்தவரையில் குற்ற சம்பவமானது தெரியவந்தவுடன் அ.சா.6 சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சண்முகராஜ் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 பேச முடியாத நிலையில் மயக்க நிலையில் இருந்ததாலும், உண்மை சம்பவத்தை அறிந்த யாரும் புகார் கொடுக்க முன்வராததாலும், அப்போது வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும்., மீண்டும் 11.00 மணியளவில் கூடலூர் அரசு மருத்துவமனை சென்றிருந்தபோது அ.சா.1 நல்ல மனநிலையில் இருந்ததால் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பின்னர் புலன் விசாரணை குறித்து அ.சா.7ன் பார்வைக்கு சமர்பித்ததாகவும், அ.சா.7 உதவி ஆய்வாளர் திரு. மணிதுரை வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தும், தடய சொத்துக்கள் கைப்பற்றியும், தொடர்ந்து அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஹரிஹரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.7– விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.8 காய சான்றிதழ் பெற்றும்

சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்தும் புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிய வருகிறது.

13.18. மேற்கண்ட விவாதங்களிலிருந்து எதிரி மீதான இ.த.ச பிரிவு 324.ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் போதிய சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

**<u>14. இ.த.ச. பிரிவு 294(b) மற்றும் 506(ii).ன் கீழான குற்றச்சாட்டுகள்</u>**

14.1. எதிரி மீது, கடந்த 11.03.2018ம் தேதி தேவர்சோலை தேவர் IIகிரவுண்ட்பாடியில் வைத்து எதிரி அ.சா.1ஐ பார்த்து தாயோளி மகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டியும், மேலும் அ.சா.1ஐ பார்த்து "உன்னை கொல்லாமல் விடமாட்டேன்" என்று கொலை மிரட்டல் விடுத்ததுள்ளதுமான எதிரியின் செய்கைகளுக்காக இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 மற்றும் 506(ii).ன் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

14.2. இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழான குற்றத்திற்கான வரையறையானது கீழ்க்கண்டுள்ளபடி வரையறுக்கப்பட்டுள்ளது.

Section 294(b) of IPC ***<u>Obscene acts and songs:</u>****- whoever, to the annoyance of other – . . . . . . . . . (b) sings, recites or utter any obscene songs, ballad or words, in or near any public place,*

என இ.த.ச. பிரிவு 294(b).ன் முக்கிய உட்கூறுகளானது, ஒரு நபர் பொது இடத்திலோ, அதன் அருகாமையிலோ, பிறருக்கு சச்சரவாக இருக்கும் வகையில் ஆபாசமான வார்த்தைகளோ, செய்கைகளோ, சமிக்ஞைகளோ செய்திருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

14.3. அதுபோல் இ.த.ச. பிரிவு 506(ii)ற்கான "குற்றமுறு மிரட்டலின் "(Criminal intimidation) வரையறையானது இ.த.ச. பிரிவு 503–ல் கீழ்க்கண்டுள்ளபடி வரையறுக்கப்பட்டுள்ளது.

Section 506 of IPC ***Criminal intimidation*: *Whoever threatens another with any injury to his person, reputation or property, or to the person or reputation of any one in whom that person is interested, with intent to cause alarm to that person, or to cause that person to do any act which he is not legally bound to do, or to omit to do any act which that person is legally entitled to do, as the means of avoiding the execution of such threat, commits criminal intimidation.*

Section 506(ii) of IPC. ***If threat be to cause death or grievous hurt, etc*** :- *And if the threat be to cause death or grievous hurt, or to cause the destruction of any property by fire, or to cause an offence punishable with death or imprisonment for life, or with imprisonment for a term which may extend to seven years, or to impute, unchastity to a woman, shall be punished with imprisonment of either description for a term which may extend to seven years, or with fine, or with both.*

14.4. மேற்கண்ட இ.த.ச. 503 மற்றும் 506(ii)ன் வரையறையானது, ஒருவர் ஏற்படுத்தும் மிரட்டலானது மற்ற நபருக்கோ, அவரது

நற்பெயருக்கோ, சொத்திற்கோ, அத்தகையவரின் நலன் சார்ந்தவருக்கோ செய்யப்பட்டு அதனால் பயம் ஏற்படுத்தும் எண்ணத்துடன் இருத்தல் வேண்டும் எனவும், அத்தகைய மிரட்டலானது மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிக்கக்கூடியதாக இருந்தாலோ, சொத்தினை தீ வைப்பதாகவோ, ஆயுள் தண்டனை அல்லது மரணதண்டனை விதிக்கக்கூடிய குற்றத்திற்குள்ளானதாகவோ, பெண்ணின் கற்பிற்கு தீங்கு ஏற்படுத்துவதாகவோ இருந்தால் ஏழாண்டுகள் வரையும், அல்லது அபராதமும், அல்லது இரண்டும் விதிக்கப்படுதல் வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

14.5. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 11.03.2018 அன்று இரவு 09.00 மணியளவில் தான் உட்பிரையர் எஸ்டேட்டில் வாட்ச்மேன் வேலை முடித்துவிட்டு தன் வீட்டுக்கு கிரவுண்ட்பாடி செல்வதற்கு வந்துகொண்டிருந்ததாகவும், அப்போது கிரவுண்ட்பாடியில் எதிரி பைசலும் அவருடன் சில கேரளா நபர்களும் சேர்ந்து தன்னை வழிமறித்து காசை இப்படி கேட்கிறாயா என்று சொல்ல முடியாத தகாத வார்த்தையால் திட்டியதாகவும், தான் ஐயப்பன் கோவிலுக்கு மாலை போட்டிருப்பதால் அந்த வார்த்தையை சொல்ல முடியாது என்றும், தனக்கு எழுத படிக்கவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார்.

14.6. மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரி தன்னை ஒரு இரும்பு கம்பியால் தனது கழுத்து பின்புறம் தோள்பட்டையில் அடித்துவிட்டதாகவும்,

எதிரி தன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி மிரட்டியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

14.7. கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கபட்ட அ.சா.3 தனது சாட்சியத்தில் அசா.1க்கும் எதிரிக்கும் என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும், கேள்விபட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 தனது சாட்சியத்தில் சம்பவம் பற்றி தனக்கு தெரியாது, சம்பவம் பற்றி தான் கேள்விப்படவில்லை என்று அரசு தரப்பு சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகியுள்ளனர்.

14.8. அவ்வாறு இருக்கையில் என்ன அசிங்கமான வார்த்தைகள் அல்லது செயல்கள் மூலம் எதிரியால் அ.சா.1ற்கு என்ன ரீதியான சச்சரவுகளோ (annoyance) பயமோ, அச்சமோ, பதட்டமோ ஏற்பட்டது என அனுமானிக்க இயலாது. அரசு தரப்பில் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 294(b) மற்றும் 506(ii).ன் கீழான முக்கிய உட்கூறுகளான எதிரி அ.சா.1ஐ பொது இடத்தில் என்ன வார்த்தைகளால் திட்டினார் என்றும், அதன் விளைவாக சச்சரவுகள் ஏற்பட்டது என்றும், எதிரி அ.சா.1ஐ கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், அதன் விளைவாக அ.சா.1 – க்கு பயமோ (alarm), பதட்டமோ, சொத்திற்கோ, நற்பெயருக்கோ இழப்பு ஏற்பட்டது என்றும், போதுமான சாட்சியங்கள் அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14.9. எனவே எதிரி மீதான இ.த.ச பிரிவு 294(b) மற்றும் 506(i).ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் போதிய சாட்சியங்களுடன்

சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

15. மேற்கண்ட விவாதங்கள் மற்றும் காரணங்களின் அடிப்படையில் எதிரி மீதான இதச. பிரிவுகள் 294(b)மற்றும் 506(ii) கீழான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் போதிய சாட்சியங்களுடன் நிரூபிக்கப்படவில்லை என்றும், எனினும் எதிரி மீதான இதச.பிரிவு.324ன் கீழான குற்றச்சாட்டை உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமும் எவ்வித சந்தேகத்திற்கும் அப்பாற்பட்ட வகையில் அரசு தரப்பு நிரூபித்துள்ளது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**16. கு.வி.மு.ச. பிரிவு 360 மற்றும் 361–ன் பலன்கள் எதிரிக்கு கிடைக்கத்தக்கதா?**

எதிரி இ.த.ச பிரிவு 324.ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 360 மற்றும் 361–ல் வலியுறுத்தப்பட்டுள்ள நன்னடத்தை சட்ட பலன்கள் கிடைக்கத்தக்கதா? என பரிசீலிக்கையில் வழக்காவணங்கள் மூலம் சம்பவத்தன்று எதிரி அ.சா.1ஐ அசிங்கமாக பேசி தாக்கி காயம் ஏற்படுத்தியுள்ளார் என அரசு தரப்பு வழக்கு சங்கதிகள் உள்ள நிலையிலும், எதிரி அ.சா.1ஐ இரும்பு கம்பியால் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ள நிலையிலும், எதிரிக்கு நன்னடத்தை பலன்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்நீதிமன்றம் கருகிறது.

17. எனவே, எதிரியிடம் அவருக்கு வழங்கப்பட வேண்டியதாய் இருக்கும் தண்டனை குறித்து கு.வி.மு.ச. பிரிவு 248(2)—ன் கீழ் கேள்விகள் எழுப்பி விசாரணை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.18 18:59:43 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**

18. எதிரி பைசலிடம் கு.வி.மு.ச. பிரிவு 248(2)—ன் கீழ் அவருக்கு வழங்கவிருக்கும் தண்டனை குறித்து கேள்விகள் கேட்டு விசாரித்ததில் எதிரி

" நான் அடிக்கவில்லை"
"நான் தப்பு செய்யவில்லை"

என பதில்கள் அளித்தார். (எதிரியிடம் தண்டனை குறித்து கு.வி.மு.ச. 248(2).ன் கீழ் எழுப்பப்பட்ட கேள்விகளும் அதற்கு எதிரி அளித்த பதில்களும் தனித்தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது)

19. எதிரி மீது நிரூபிக்கப்பட்ட குற்றத்திற்கு அவருக்கு நன்னடத்தை சட்டத்தின் கீழான நன்னடத்தை பலன்கள் கிடைக்கத்தக்கதல்ல என முன்விவாதத்தில் முடிவு காணப்பட்டுள்ளது. எதிரி அவரது கு.வி.மு.ச. 248(2)—ன் கீழான விசாரணையில், " நான் அடிக்கவில்லை" "நான் தப்பு செய்யவில்லை" என சொல்லியுள்ளதை இந்நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொண்டது. இ.த.ச. பிரிவு 324ன் கீழான குற்றச்சாட்டிற்கு 3 ஆண்டுகள் வரை நீட்டிக்கத்தக்க சிறை தண்டனையும் அபராதமும்

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.18 18:59:46 +0530

விதிக்கலாம் என சட்டநிலை இருப்பதால் கு.வி.மு.ச. பிரிவு 29(2)–ன் கீழ் இந்நீதிமன்ற ஆள்வரை உள்ள அபராதம் ரூ.1000/– போதுமானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**20. இறுதியாக,**

**(i) எதிரி இ.த.ச. பிரிவு 324–ன் கீழ் குற்றச்சாட்டின் கீழ் குற்றவாளி என கு.வி.மு.ச பிரிவு 248(2).ன் கீழ் தீர்மானித்து மேற்கண்ட இ.த.ச. பிரிவு 324 – ன் கீழான குற்றச்சாட்டிற்கு ஒரு வருடம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், ரூபாய் 1000/– (ரூபாய். ஓராயிரம் மட்டும்) அபராதமாக செலுத்த உத்தரவிட்டும், அபராதம் செலுத்தத் தவறும் பட்சத்தில் கூடுதலாக ஒரு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனையும் விதித்தும் உத்தரவிடப்படுகிறது.**

**(ii) எதிரி இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழ் குற்றச்சாட்டின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும்,**

**(iii) எதிரி இ.த.ச. பிரிவு 506(ii)ன் கீழான குற்றச்சாட்டின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும் இத்தீர்ப்புரையானது அவையறிய பகிரப்படுகிறது.**

21. இவ்வழக்கில் படிவம் 95ன் மூலம் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட P.R.No.28/2018 என பதிவில் உள்ள இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.பொ.1 – இரும்பு கம்பியை மேல் முறையீடு காலத்திற்கு பின்பு அழித்துவிட உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.18 18:59:49 +0530

பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் வருடம், ஜுன் மாதம் 18.ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.18 18:59:52 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| **வரிசை எண்.** | **சாட்சிகள் விபரம்** | **விளக்கம்** |
|---|---|---|
| அ.சா.1. | திரு. பிரதீப் குமார் | புகார்தாரர்/ பாதிக்கப்பட்ட நபர் |
| அ.சா.2 | திருமதி. தனலட்சுமி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு. அஷ்ரப் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு. வாசுதேவன் | கேள்விபட்ட சாட்சி |
| அ.சா.5 | திருமதி. பிரியங்கா | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.6 | திரு. சண்முகராஜ் | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவர் |
| அ.சா.7 | திரு. மணிதுரை | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| **வ எண்.** | **சான்றாவண விபரம்** | **யார் மூலம் நிரூபிக்கப்பட்டது** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜர் | அ.சா.7 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.7 |
| அ.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.7 |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6 | படிவம் 91 | அ.சா.7 |
| அ.சா.ஆ.7 | விபத்து பதிவேடு | அ.சா.7 |
| அ.சா.ஆ.8 | காயச்சான்றிதழ் | அ.சா.7 |

**எதிரி தரப்பு சாட்சிகள்:–**

இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–**

இல்லை

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:–**

| வ எண். | சான்றுபொருள் விபரம் | யார் மூலம் நிரூபிக்கப்பட்டது |
|---|---|---|
| அ.சா.பொ.1 | இரும்பு கம்பி – 1 எண்ணம் | அ.சா.1 |

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:–**

இல்லை

**குறிப்புகள் :**

1. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
2. வழக்கு விசாரணையில் எந்த சாட்சிகளும் மூன்று தினங்களுக்குமேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3. வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.
4. வழக்கின் முடிவு காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.18
18:59:58 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**

Visit **ecourts.gov.in** for updates or download mobile app "**eCourts Services**" from Android or iOS